மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் தீட்டப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் பணிகள் எடுக்கப்பட்டு, பல்வேறு கிராமங்களுக்கு அந்தத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டும் தண்ணீர் வரவில்லை என்ற கோரிக்கையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கோரிக்கையின் அடிப்படையில், எந்தெந்த கிராமங்களுக்கு, என்ன காரணத்தினால் தண்ணீர் வழங்கப்படாமல் இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கும்பட்சத்தில், நான் அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத் திட்டத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பார்க்கிறேன். ஏனென்றால் குடிநீரைப் பொறுத்தவரையில், அனைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் மூலம்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கெல்லாம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, அவற்றில் கிராமங்களை இணைத்து, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் தண்ணீர் வழங்குகின்ற பணி நடைபெற்று வருகிறது. உங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லை. நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர் ஆவீர். இப்போது, அதுசம்பந்தமாக, நீங்கள் சொல்லக்கூடிய கோரிக்கைகளில் ஏதாவது மாற்றம் இருந்தால் நானே நேரில் சென்று பார்த்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து, அந்தத் திட்டத்தில் வேறு ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்றால் மாறுதல் செய்து தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

புதிய மாவட்டம்

***8942—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் குறைந்தபட்ச காரணிகளை நிறைவு செய்யாததால் ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் தமிழக முதலமைச்சர், கழக பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது திருவண்ணாமலை, ஆரணி, செய்யாறு ஆகிய மூன்று கோட்டங்களும், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், செங்கம், தண்டராம்பட்டு, போளூர், கலசப்பாக்கம், ஆரணி, சேத்துப்பட்டு, செய்யாறு, வெம்பாக்கம், வந்தவாசி, ஜமுனாமரத்தூர் என மொத்தம் 12 வட்டங்களும் பிரிக்கப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம் 18 ஊராட்சி ஒன்றியங்களையும், 4 நகராட்சிகளையும், 10 பேரூராட்சிகளையும், 860 ஊராட்சிகளையும் உள்ளடக்கியது. திருவண்ணாமலை மாவட்டம் மிகப் பெரிய பரப்பளவைக் கொண்டது. அம்மாவட்டத்தைப் பிரிப்பது அவசியம் மற்றும் அத்தியாவசியமாகும். எனவே, வெம்பாக்கம், செய்யாறு, வந்தவாசி, சேத்துப்பட்டு, ஆரணி மற்றும் போளூர் ஆகிய 6 வட்டங்களை உள்ளடக்கி—இந்த 6 வட்டங்களில் 4 சட்டமன்றத் தொகுதிகள் வருகின்றன—ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி. . .*

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏற்கெனவே அனைத்து ஊர்களின் பெயர்களையும் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடு) ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளையெல்லாம் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு)*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்குவதன்மூலம் பொதுமக்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *புதிய மாவட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மேற்கண்ட 6 வட்டங்களின் பரப்பளவு சுமார் 8,500 சதுர கிலோ மீட்டராகும். இவ்வட்டங்களில் உள்ளடக்கிய மக்கள்தொகை ஏறக்குறைய 20 இலட்சமாகும். மேலும் 515 ஊராட்சிகளை உள்ளடக்கி, 700-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளதால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி கேட்க உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தி அடைந்துள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல 8 மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்கள்,*

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் என் மத்தியிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியிலும் கடிதங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைபோல, RDO Office, *தாலுகாவை எல்லாம் பிரிக்க வேண்டும் என்று மனு கொடுத்திருக்கிறார்கள். நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே முடிவு எடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர்* S. *இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைப்பதற்கான நோக்கம் என்னவென்றால், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் வெம்பாக்கம் வட்டத்திலுள்ள தூசி கிராமத்திலிருந்து 120 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டும். வந்தவாசி வட்டத்திலுள்ள கீழசாத்தமங்கலம் ஊராட்சியிலிருந்து 100 கிலோமீட்டர் செல்ல வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அமைச்சராக இருந்தவர்கள், கேள்விதான் புரிந்துவிட்டதே அனைவருக்கும். அதை ஏன் விளக்க வேண்டும். மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 8 மாவட்டங்களைப் பிரிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். நிதிநிலைக்கேற்ப பிரிப்போம். உங்களுக்கும் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? கேள்விக்கு வாருங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு நகரத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 100 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். மேலும், போளூர் வட்டம், கழும்பூர் பேரூராட்சியிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். எனவே, பொதுமக்கள், வியாபாரிகள், அரசு அலுவலர்கள் அனைவரும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மற்ற மாவட்ட அலுவலகங்களுக்குச் செல்ல நேரிடும்போது, தினந்தோறும் 2 மணி நேரம் அல்லது 3 மணி நேரம் பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் அவசியப் பணிகள் தடைபடுகின்றன.*

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நீங்கள் அமைச்சர் கொண்டு வந்ததை மாற்றியே தீர வேண்டுமென்று சொல்கிறீர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் திருவண்ணாமலை மாவட்டத்தைப் பிரித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூன்று கேள்விகள் இன்னும் முடிவடையவில்லை.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *ஒரு புதிய மாவட்டம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அந்த மாவட்டத்திலே, அந்தக் கடைசிக்கும் இந்தக் கடைசிக்கும் வருகிற நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வருவதற்கு நீண்ட நேரம்,நெடிய தொலைவு வருவது என்பதெல்லாம் தெரியும். இதைப்போல பெரிய மாவட்டங்கள், தமிழ்நாட்டிலே நிறைய இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் அதன்மீது முடிவு எடுப்பார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிதி சூழ்நிலையில் அதற்கு எப்படி முடிவு எடுப்பது என்பதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிறது. ஆனால் அதனைச் சட்டப்படி பிரிப்பதற்கு வேண்டிய அந்தத் தகுதி இல்லாமல் இருக்கிறது. அதற்கு மேலே முடிவு எடுக்க வேண்டியது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 மாவட்டங்கள் தனி மாவட்டமாக அறிவிக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு இந்தச் சபையையே மகிழ்விக்கிறது. இந்த நிலையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இருங்கள் நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இது அதிக வருவாய் கொண்ட மாவட்டம், மாநகராட்சியை மையமாகக் கொண்டிருக்கக்கூடிய பகுதி. மாவட்டத் தலைமை மருத்துவமனை, நீதிமன்றங்கள், 2 கல்லூரிகள் அங்கு இருப்பதால் கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அறிவிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்கிறேன். இது கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்களுடைய கோரிக்கையும்கூட. எனவே, டெல்டா மக்களின் மனம் குளிர கும்பகோணம் தனி மாவட்டமாக வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8 மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் மனு கொடுத்திருக்கிறார்கள். எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அரசினுடைய பரிசீலனைக்கென இந்த 8 மாவட்டங்களையும் எடுத்து வைத்திருக்கிறோம். நிதிநிலைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப அதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.